## திருச்சி மண்டல இரயில்வே அலுவலக நுழைவு வாயிலில் இந்தியில் பெயர்!

# இந்தித் திணிப்பு வெறியில் பா.ஜ.க. எல்லை மீறிச் செல்கிறது!


## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, மார்ச் 6 - திருச்சி மண்டல இரயில்வே அலுவலக நுழைவு வாயிலில் 'கர்தவ்ய த்வார்' என எழுதி வைத்துள்ளதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்தித் திணிப்பு வெறியில் பா.ஜ.க., எல்லை மீறிச் சென்று கொண்டிருப்பதாக முதலமைச்சர் விமர்சித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில்,

**நுழைவு வாயிலிலேயே வாயில் நுழையாத பெயர்!** என்றும் இந்தித் திணிப்பு வெறியில் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கிறது பா.ஜ.க.! என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

'மொழி ஒன்று வரிவடிவம் மூன்று' எனும் வகையில் இந்திப் பெயரையே தமிழ், ஆங்கிலத்திலும் எழுதி வைக்கும் இழிவான செயலில் ஒன்றிய பா.ஜ.க.



அரசு இறங்கியுள்ளதாகவும், வருங்கால வைப்பு நிதி அலுவலகங்களில் ஏற்கெனவே 'பவிஷ்ய நிதி பவன்' என்ற பெயரைத் திணித்து விட்டதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

**கொட்டமும், ஆணவமும் கூடிக்கொண்டே போகிறது!**

குற்றவியல் சட்டங்களுக்கும் சமஸ்கிருதப் பெயரைத்தான் ஆங்கில வரி வடிவத்தில் எழுதுகின்றனர் என்றும், ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சகத்தின் பெயர் 'ஜல் சக்தி' ஆகிவிட்டது என்றும், மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டப் பெயர் மாற்றத்திலும் இதே வேலையைத்தான் காட்டினார்கள் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கொட்டமும், ஆணவமும் கூடிக்கொண்டே போகிறது, தமிழர்களின் சுயமரியாதையைச் சீண்டிப் பார்க்கும் இவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்! என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழர்களின் சூட்டை உணர வேண்டி இருக்கும்!**

தமிழ், ஆங்கிலப் பெயர்களிலும் இந்தியைத் திணிக்கும் முயற்சியைக் கைவிட்டு, உடனடியாக அங்கு சரியான தமிழ்ப் பெயர்கள் இடம்பெற வேண்டும், இல்லையென்றால் தமிழர்களின் சூட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு உணர வேண்டி இருக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் 63 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தினை" திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, உயர்கல்வித்துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ. சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சமத்துவக் கனலைச் சமூகத்தில் விதைத்த

# அய்யா வைகுண்டர் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 6 - அய்யா வைகுண்டர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், சமத்துவக் கனலைச் சமூகத்தில் விதைத்தவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

அய்யா வைகுண்டர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இடுப்பில் இருந்த துண்டைத் தலைக்குக் கிரீடமாக மாற்றிய அய்யா வைகுண்டரை நாம் பெற்ற நாள்!



"கீழ் நோக்கிப் பிடித்தாலும், மேல் நோக்கியே எரியும் தீபத்தைப்போல, விளக்கின் ஒளியாய், வீரத் தனமாக இருங்கள்" எனச் சமத்துவக் கனலைச் சமூகத்தில் விதைத்து நிறைந்தவர் அய்யா வைகுண்டர்.

'தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்' எனும் அவரது கூற்றையே ஆட்சிக்கான அடிப்படையாய்க் கொண்டு நலிந்தோரின் நலம் நாடும் அரசாக நமது 'திராவிட மாடல்' அரசும் செயல்படுகிறது.


அய்யா வைகுண்டரின் பொன்மொழிகளைப் பின்பற்றி நடப்போம்! சமத்துவம் பேணுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில்

# ரூ.63 கோடியில் "முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கம்"!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!



**சென்னை, மார்ச் 6 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் 63 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தினை" திறந்து வைத்தார். மேலும், "உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.**

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர் கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கையில் 7.5 விழுக்காடு முன்னுரிமையின் அடிப்படையில் இடஒதுக்கீடு, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் தமிழ்நாடு உயர்கல்வி மாணவர்கள் சேர்க்கையில் 47 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வரசு பொறுப்பேற்ற இந்த 5 ஆண்டுகளில், கிராமப்புற மாணவர்களின் உயர்கல்வித் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யும் நோக்கில் 38 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும்,

4 வேளாண்மை கல்லூரிகளும், ஒரு பாலிடெக்னிக் கல்லூரி, ஒரு சட்டக் கல்லூரி மற்றும் 41 தொழில் பயிற்சி கல்லூரிகள் என மொத்தம் 85 புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டு, 28,351 மாணவர்கள் கூடுதலாகவும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மட்டும் 252 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளதால் 13,346 மாணவர்கள் கூடுதலாகவும் பயனடைந்து வருகின்றனர்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கம்!**

சென்னை, மாநிலக் கல்லூரியில் 5.7.2022 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் முதலமைச்சர் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு ஆற்றிய உரையில்,

"300க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் இங்கே படிக்கிறார்கள். தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் இருந்து அவர்கள் இங்கே வந்து, தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கென்று விடுதி கிடையாது. அவர்களுக்கான விடுதி, மாநிலக் கல்லூரி வளாகத்திலேயே அமைத்துத் தரப்படும்" என்றும், "2000 பேர் அமரக்கூடிய வகையில், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பெயரால் மாபெரும் அரங்கம் மாநிலக் கல்லூரி வளாகத்தில் கட்டித் தரப்படும்" என்றும் அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாற்றுத்திறனாளி மாணவர்கள் மற்றும் மாணவியர்களுக்கான மாநிலக் கல்லூரி வளாகத்தில் 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சிறப்பு மாணவர் மற்றும் மாணவியர் விடுதியினை 4.12.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் 63 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள "முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தினை" முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தின் சிறப்பம்சங்கள்!**

சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கமானது 60,672 சதுர அடி பரப்பளவில் முழுவதும் குளிரூட்டப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய கலையரங்கம், நிர்வாக அலுவலகம், முக்கிய பிரமுகர்கள் அறை, கலைஞர்கள் ஓய்வு அறையுடன் கலையரங்கத்தின் தரைத் தளத்தில் 1,272 நபர்களும், முதல் தளத்தில் 800 நபர்களும் என மொத்தம் 2,042 நபர்கள் அமரக்கூடிய வகையில் "முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கம்" அமைக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுப் புகழ் பெற்ற மாநிலக் கல்லூரியில், 5.7.2022 அன்று மாநிலக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி அரசு கல்லூரியில் மிகப்பிரமாண்டமான முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தினை மாணவர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவந்த முதலமைச்சர் அவர்களுக்கு மாநிலக் கல்லூரி மாணவர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தயாநிதிமாறன் எம்.பி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., துணை மேயர் மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தர வல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் வடக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் குடிமங்கலம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவினை ஒன்றியப் பொறுப்பாளர் கவிதா கிரி வழங்கினார். இதில் ஒன்றிய அவைத்தலைவர் அற்புதராஜ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் கே.ரகுபதி உள்பட மாநில, மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட கோவையில் உள்ள மாவட்ட தி.மு.கழக அலுவலகம் முன்பு 68 வது வட்டச் செயலாளர் போஸ் மாமன்ற உறுப்பினர் கமலாவதி போஸ் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். இதில் தொண்டரணி அமைப்பாளர் கராத்தே அர்ச்சுனன், அலுவலகப் பொறுப்பாளர் சி.பூபாலன், எஸ்.பிரின்ஸ், பாக முகவர் (BLA 2) சங்கீதா அர்ச்சுனன், கண்ணம்மாள், சுரேஷ், விமலா, விவேகானந்தன், ஸ்ரீதர், வெங்கட் ராமமூர்த்தி, பார்த்திபன், ஜெகநாதன், அக்சய் குமரன், சுப்பிரமணி, கோபால் பாட்ஷா, அபிஷேக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.